285

உ

ஸ்ரீமாரியம்மன் துணை.

மாதானம்.

# ஸ்ரீமாரியம்மன் பதிகம்.

இஃது

சீர்காழி பிடாரி தெற்கு வீதி
நாயினாராஜா அவர்கள் குமாரர்
கிருஷ்ணஸாமிதாஸரால்
இயற்றப்பட்டு

ஷை யூர் காசிக்கடை
வைத்தீஸ்வரன்கோவில்
முத்துசாமிபத்தர் அவர்களால்
சீர்காழி
திரிபுரசுந்தரி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

ஸ௵ கன்னிரவி.

1915.

Q25:38.2114m7
M15
171867



ஸ்ரீ மகாதானம் மாரியம்மன்.

ஸ்ரீமாரியம்மன் துணை.

மா தா ன ம்

# ஸ்ரீமாரியம்மன் பதிகம்.

## காப்பு.

சீர்பெருகும் மாதானம் தனிலோங்கு மகமாரிச் செல்வி தன்மேல்ப்
பேர்பெருகும் பதிகமுயர் போற்றி திருவாழியுடன் லாலி செப்ப
ஏர்பெருகும் ஐங்கார்தம்இருகமலத்தடியிணையை யேற்றிப் போற்றிப்
பார்பெருகும்மாதானம்மாரிதமின் பதமலரின் திருவருளைப் பணிந்தேன
காப்பு.

## பதிகம் பத்து.

ஆலிலைமேல்பள்ளிகொண்டேக்ஷீராப்திதமிலமர்ந்துள்ள அரிவிஷ்ணுவும்
அன்றுபத்தவதாரமுலகமதை ரெக்ஷிக்க அன்னவரும் தாமும்செய்ய
எண்ணிலாக்கர்வமுளக் கம்ஸனவன் றங்கையை இன்பவசு தேவர்க்கீய

இருவரும் மணக்கோல ஊர்வலம் வந்திட இக்கம்ஸன் ரதமோட்டிட
பக்குவமதாய் அசரீரீ எ கம்ஸனேபரிந்தோர்க்கும் உன் றங்கையின்
அஷ்டம கர்ப்பத்திலுதித்திடும் கண்ணனால் அழிந்துநீ போவையென்ன
அதுமுதல் அவர்களைகாவல்செய்தே பிள்ளைஅருத்திட்டுவந்த துஷ்டன்
அவனைச் சதிசெய்ய வந்ததிரு கிருஷ்ணனுடன் அருள்மாரி வந்ததாயே
அகிலமெல்லாம்மெங்கு மேற்றித்தொழுதிடும் ஆதிஉயர்மாதானம் வாழ்
அத்தன்ஹரிதங்கையே பத்தர்பணிமங்கையேஅம்மைஅருள்மகமாரியே.



சுத்தசந்தணபுழுகுகஸ்தூரிஜவ்வாது சுகந்தஉயர் திருமஞ்சனம்
தித்திக்கும்தேனமுர்த பஞ்சாஸவகைகளும் திவ்வியஅபிஷேகங்களும்
நித்தநித்தியம்கொண்டு ஆனந்தவைபவநேர்மையுரு வலங்காரமும் [மும்
எத்திசையுமுள்ளவர்கள் உபயங்களோடுதினமியற்றிவரும் நைவேத்திய
மெத்தஉயர்கனிகளும் தூபதீபங்களும் நிகரின்றிகொள்ளும்தாயே
சுத்தசத்துவகுணஅத்தனும் யீசனின் சத்திமயமானநீயே
கற்றவர்கள்கோடிபேர் சத்தியாயுந்தனைச் சந்தோஷம்கொள்ளும்மாயே
இத்தரையினுள்ளவர்கள் எத்தனைபேருந்தனை யெண்ணிமிகவானந்தமாய்
பத்தியாய்நடப்போருக்கென்னாளும்உன்னருளின்பதமருள மாதானவாழ்
அத்தன்ஹரிதங்கையே பத்தர்பணிமங்கையே அம்மையருள்மகமாரியே.

இன்னிலத்திலுள்ள மன்னுதிமன்,ர்கள் எல்லவரும் போற்றுந்தேவி
பொன்னிலகும் பாதச்சிலம்பாட நிர்த்தமிடும்புவியினுயர் ஆதிதேவி,
கன்னிதிருகங்கணம் கைவளயல்மோதிரம் கனமஞ்சளுடையதேவி
கன்னிடும்பாதமலர் குங்குமம் புஷ்பமும் நாடெலாமளித்ததேவி
நங்கைமுகம்தன்னிலே மூக்குத்திரெத்தினம் நல்திலதமிட்டதேவி
சின்னம்சிருத்தஇடை சிங்காரஒட்டியாணம் சீராகக்கொண்டதேவி
கர்ணத்தில்பூஷணமும் கனமார்புபதக்கமுயர் சொர்ணமயமானதேவி
சுந்தராநந்தியே சந்ததம்பட்டாடை சர்வமுமணிந்ததேவி
விந்தைபலவேடிக்கை அந்தமுடனேஓங்குமரசர்புகழ்மாதானம்வாழ்
அத்தன்ஹரிதங்கையே பத்தர்பணிமங்கையே அம்மையருள்மகமாரியே.

ஆதிசக்திதேவி சோதிமயமாய்வந்த அன்னைமகமாரிதாயே
அகிலாண்டபுவனத்தி ஞெளியாகிநிரைந்திட்ட அம்மைமகமாரிதாயே
சோதிமயமானஉயர் ஆதிப்பராசக்தி செல்விமகமாரிதாயே
வாமுதாகண்ணொளிவு வீசித்துலக்கிடும் வஞ்சிமகமாரிதாயே
நீதியாய்துதிப்போருக்கென்னாளும்உன்னருளை நிகழ்த்துமகமாரிதாயே
ஆசித்துஉன்னடியை பூசித்துப்பணிவார்க்கு அன்புமகமாரிதாயே
தூசித்துஉந்தனைப்பேசித் திரிவார்க்கு துன்பமகமாரிதாயே

சுத்தபிர்ம்மமுமூர்வஸ்துவாய் வந்திட்டசோதி மகமாரிதாயே
முத்திக்குமுதலான சத்திபதம்ஆதியே சகலர்புகழ்மாதானம்வாழ்
அத்தன்ஹரிதங்கையே பத்தர்பணிமங்கையேஅம்மையருள்மகமாரியே.

இகபரசாதகம்ஒன்ருய் நிரைந்திட்ட ஈசன்புகழ்வல்லவி
எங்கும்நிரைந்திட அன்பர்புகழ்ந்திட விலங்குமுயர்வல்லவி
ஏகமாய்ஒன்ருகிபோகமாய் வந்திட்டலோகமாதா வல்லவி
ஈசன்புகழ் ஆதிசேஷசயனமெனுடு எங்கும்நிரைவல்லவி
எத்திசையுமெவ்வூரும் மெங்கணும்நிரைந்திட்டு இன்பசுகரசவல்லவி
பாசத்துள்கட்டுள செய்யும்வகையோடுபின் கரையேற்றிட வல்லவி
கருணையொடு அடியார்க்குதுணையாய் இருந்திலகும்கருணாகரவல்லவி
காசினிபில்லேசமும் பாசபந்தவினைப் பற்றிடாச்செய்வல்லவி
ஆசைக்கினியகாழிநகரோங்க புகழோங்குமரியஉயர் மாதானம்வாழ்
அத்தன்ஹரிதங்கையே பத்தர்பணிமங்கையேஅம்மை அருள்மகமாரியே.

நின்னையல்லால்வேறு ஒன்றுதானிவ்வுலகில் நினைத்திடவும்நியாயமில்லை
அன்னைலெக்ஷிமிதேவி அகிலபிரபஞ்சத்தின் ஆதாரபூதிநீயே
பண்ணியக்கருமங்கள் எண்ணிடமுடியாத பாபம்துலைக்கும்தாயே
முன்னையேஉன்னருள்இல்லாது உலகினில்முனைந்து யான்வந்தவாறு

தன்னையேஉரைசெய்வாய்தாயும் நீயல்லாதுசமுசயம் வேறுமுண்டோ
பின்னையும்நின்னருள்தன்னாலேயானுமே அண்ணல்தனைக்காணவேணும்
எண்ணிடாஉன்மகிமைதன்னை யுரைத்திடயார்வசமாகும் தாயே
கண்ணையளித்துநீ காப்பாற்றும்வல்லவி கருணைகடாக்ஷிநீயே
மன்னாதிமன்னர்கள் எண்ணிட்டவருள்செய்ய ஈஸ்வரிமாதானம்வாழ்
அத்தன்ஹரிதங்கையே பத்தர்பணிமங்கையே அம்மையருள்முகமாரியே

செக்குக்குருட்டியேவந்தபுளிமரக்கட்டைச் சிறந்துன்சன்னதி பக்கலில்
நெக்கிடக்கிளம்பாமல் நின்றிடஉம்மருளின் நேர்மைபலச்செய்த தாயே
பக்குவமதாய்த்துண்டு மரமாய்முளைத்திடப்பாலித்த பரஞ்சோதியே
திக்குத்திசைப்பாவிதக்க பலமரங்களாய்த்தாவி வளரச்செய்தனை
மிக்கப்பெருத்துமரம்நிர்க்க உன்சன்னதியில் நீடூழிகாலமாக
பக்கத்தில்வந்தவர்கள் சொக்கித்தளர்ந்து உன்செய்கையுயர்பெருமையா
துக்கம்துலைத்தவரை ஒக்கவிருந்துகிருபை யெப்போதளிக்கும் தாயே
சிக்குப்படும்மனதைநிர்க்க உன்திருவருளின்மிக்க உயர்அருள்புரிகுவாய
மக்கட்செய்தபழி வெட்கிஓடஅருள் தக்கதிரு மாதானம்வாழ்
அத்தன்ஹரிதங்கையே பத்தர்பணிமங்கையே அம்மையருள்மகமாரியே.

புத்திரிலாததோர் கோடானகோடிபேர் கோரியேஉன்னடிகளை
நித்தம்நித்தம் துதிச்செய்திட அவர்கட்கு நிலைத்திடப்புத்திரிபுத்திரர்
எத்தனையோபேர்கள் பிள்ளைதம்தொட்டிகள் இணையின்றிஉன்சன்னதி
வைத்துதம்கடமையைவழிசெய்யஉன்னருளைவழங்கிடச்செய்யுந்தாயே
சுத்தஉயர்காணிக்கைக்கொண்டு வெகுபேர்களும் சுகந்தஉயர்மா தீபமும்
எத்திசையுள்ளவரும் யாவரும்மன்னரும் ஈஸ்வரி உம்மாலயம்
சித்தங்கலங்காதுவந்து மேபலவிதத்தேவி உன்கோரிக்கையை
மெத்தமெத்தவிதஅர்ப்புதம் ஓங்கிடவிளங்கவருள் செய்யுந்தாயே
நத்தியேஉலகோரை ரக்ஷிக்ககிருபைபூண்டு நன்மைதரமாதானம்வாழ்
அத்தன்ஹரிதங்கையே பத்தர்பணிமங்கையே அம்மையருள்மகமாரியே. ௮

கண்ணொளிமறைத்தவர் யெத்தனைபேர்களோ கருதியுன்றிருசன்னதி
கண்ணியேவிரதமொடு நாள்க்கணக்கிட்டுமே நாடிபணிசெய்பவோரும்
எண்ணிடமுடியாது என்தாயேஉந்தனுயர் இன்பரசமகிமைதன்னை
பண்ணியப்பாவத்தால் வந்திட்டதொல்லைக்கும் பணியுநாள் உருதிக்குமே
சுன்னமாய்போனகண்மின்னொளிபோலவேதுலங்கவருள்செய்யுந்தாயே
விண்ணோர்கள்கண்பூவுமிகுமறைவுதவக்குறைவெகுதுன்பம்நீக்கியருள்வா
திண்ணமாய்நம்பிடஅண்ணல்முதலனைவரைத்தீவிரம்கார்க்கும்நீயே [ய்
உண்ணவருள்செய்வதுமுறங்கவருள்தருவதுமுண்மைவழிதெரிவிப்பதும்

சின்னமதுமாரிடமுன்குறைவு ஒப்பிடபின்குறைவுதீர திருமாதாணம்வாழ்
அத்தன்ஹரிதங்கையே பத்தர்பணிமங்கையே அம்மையருள்மகமாரியே.

சர்வஉலகத்தவரும் சர்வமதவித்தகரும் சந்தோஷம்கொள்ள அருள்வாய்
சங்கம்பழம்போலும் ஆணிமுத்துரத்னம் சார்ந்தபலவருள் செய்குவாய்
சந்தேகம்கொண்டவரை வாட்டியேவணங்கிடச் சமுசயம்நீக்கியருள்வாய்
சுத்தமொடுபத்தியைவிடுத்தவர்தம்மோரைச்சிறந்துசோதனைசெய்குவாய்
பத்தியொடுதொழுவோரை சித்தங்கலங்காமல் பாலித்தருள்புரிகுவாய்
முத்திக்குமுதலாகவந்திட்டதெய்வமேமுனைந்தெம்மைக்காத்தருளுவாய்
சித்தங்கலங்கிடாவண்ணம் துதித்திடத்தேவிநீ யருள்புரிகுவாய்
முத்தர்கள்பணிந்திடும் நித்தியகல்யாணியே சித்தத்திருந்துஅருள்வாய்
எத்திசையுமெல்லவரும் போற்றிபுகழ்ந்திடும் இன்பாசமாதாணம்வாழ்
அத்தன்ஹரிதங்கையே பத்தர்பணிமங்கையே அம்மையருள்மகமாரியே.



போற்றி.

அன்னையேபோற்றிபோற்றி அகிலமாதாவே போற்றி
கண்ணேயேஅளிக்கும் திவ்வியகருணைகடாக்ஷி போற்றி
உன்னையேதுதிப்பார்க்கெல்லாம் உம்மருளளிப்பாய் போற்றி
என்னையேபெற்றாய்போற்றி இன்பமகமாரி போற்றி

இன்னிலத்துயரும்காழி இலங்குமாதானம் போற்றி
முன்னமேபணிந்தேன்யானும் முனைந்துகார் போற்றி போற்றி.

வாழி

அம்மையே வாழி வாழி அரியமாதானம் வாழி
தம்மையேதுதிக்கும்மிந்தசரித்திரம் வாழி வாழி
எம்மையேஎழுதக்கோரி இன்பவருளளித்தாய் வாழி
செம்மையிலுள்ளமாந்தர் சிறுவன்மேல் கோபம் செய்யா
வண்ணமே உரைக்க வாழி வகையதைச்செய்வாய் வாழி
இம்மையில்காழிஓங்கி இலங்குமாதானந்தன்னில்
அன்னையாம்தேவிமாரி அருள்பதமளிப்பாய்வாழி
நன்மையேசெய்யும்தெய்வநாயகி வாழி வாழி.

## ஸ்ரீ மாரியம்மன் லாலி.

(1) சீர்பெருகும் மாதானம் சிறந்துவளர்தேவி
சிருங்கார மகமாரி செல்விபரஞ்சோதி
லாலிலாலன்னை லாலி

(2) பார்மகிழ மாயனுடன் பிரந்துவந்த தேவி
ஊர்மகிழத் தேவிமாரி ஆனபரஞ்சோதி
லாலிலாலன்னை லாலி

(3) சுத்தமொடு பத்திசெய்யும் உத்தமர்க்குதவி
நித்தம்நித்தம் கிருபையளிக்கும் சத்திபரஞ்சோதி
லாலிலாலன்னை லாலி

(4) தேசமதிலுள்ளவர்கள் ஆசைஉன்மேற்கொள்ள
பாசபந்தம் தான்விலக்கும் நேசபரஞ்சோதி
லாலிலாலன்னை லாலி

(5) கன்னிமகமாரிதாயே அன்னையெனையாள்வீர்
புண்ணியம்தான்றழைக்க எண்ணும்பரஞ்சோதி
லாலிலாலன்னை லாலி

(6) ஆசையாய் காழிநகர் வாழும் கிருஷ்ணதாஸன்
பூசித்த இம்மொழியை நேசிபரஞ்சோதி
லாலிலாலன்னை லாலி.

முற்றிற்று

---



உ

# விளம்பரம்.

இதனால் சகலமான ஜனங்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் அடியில்கண்ட ஷாப்பில் இப்புத்தகமும் இப்புத்தகமியற்றியவரால் செய்யப்பட்டுள்ள ரிஜிஸ்டர் செய்த திருநாங்கூர் வைபவக்கும்மியும், திருஞானஉடர்க் கூரும், வெள்ளநெடுஞ்சிந்தும், திருஞானசம்மந்தர்ஒயில் கும்மியும், ஆபத்துகார்த்தவிநாயகர் ஸ்துதியும் இன்னும் அநேகபுத்தகங்களும் ஷாப்ஸ்டேஷனெரி சாமான்களும் விலைசரசமாய்க் கிடைக்கும்.

இப்படிக்கு,

**பா. கு. வே. ராஜகோபாலசெட்டியார்,**

சீர்காழி.